இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 01-08-2023

# ஜெயலலிதாவும் பா.ஜ.க.வும்

**ஜெ**யலலிதாவின் கனவுகளை நிறைவேற்றப் போவதாகவும், அவரது காலத் திட்டங்களைத் தொடரப் போவதாகவும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள், ராமேஸ்வரத்தில் உறுதி எடுத்திருக்கிறார். பாவம், அவர்களுக்கு அடையாளம் காட்ட சொந்தக் கட்சியில் யாருமில்லாத வறட்சியின் வெளிப்பாடு இது.

**★பா.ஜ.க.வுக்கு தந்து வந்த ஆதரவை ஜெயலலிதா வாபஸ் வாங்கிய அன்று, 'இன்று இரவுதான் நான் நிம்மதியாக தூங்கப் போகிறேன்' என்றவர் வாஜ்பாய்.**

**★'அத்வானிக்கு செலக்டிவ் அம்னீஷியா' என்று சொன்னவர் ஜெயலலிதா.**

**★'மோடியா, இந்த லேடியா?' என்று கேட்டவர் ஜெயலலிதா. இதையெல்லாம் மறந்து விட்டு ஜெயலலிதா துதிபாட அமித்ஷா தொடங்க என்ன காரணம்? அ.தி.மு.க.வை வைத்து டெபாசிட் வாங்கலாமா என்ற நப்பாசைதான்.**

**'இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த ஆட்சி ஜெயலலிதா ஆட்சி தான்" என்று 2016 ஆம் ஆண்டு சொன்ன அதே நாக்குதான், இன்று ஜெயலலிதாவின் திட்டங்களை நாங்கள் தொடருவோம் என்றும் சொல்கிறது.**

2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இங்கே பரப்புரை செய்ய வந்த அமித்ஷா, அ.தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பேசினார். திருச்சியில் பேசிய அமித்ஷா, ஜெயலலிதாவை கடுமையாகத் தாக்கினார். "இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசாங்கம் ஜெயலலிதாவின் அரசாங்கம்தான் என்றார். "மே 16 ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சியை அகற்றுங்கள் என்று மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று பேசினார்.

மின்துறை அமைச்சர் பியூஷ் கோயல் உட்பட மூன்று மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்ட செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றிய அவர், "கடனில் சிக்கித் தவிக்கும் மாநில மின் விநியோக நிறுவனங்களுக்கு உதவும் நோக்கில் 'உதய்' உள்ளிட்ட மத்திய திட்டங்களை செயல்படுத்துவதில் மாநில அரசு ஒத்துழைக்கவில்லை" என்றும் குற்றம் சாட்டினார். அப்போது அருகில் இருந்த அமைச்சர் பியூஸ் கோயல், 'ஜெயலலிதா, யாராலும் அணுக முடியாத முதலமைச்சராக இருந்தார்' என்று சொன்னார்.

**"அ.தி.மு.க. அரசு, தமிழகத்துக்காக மத்திய அரசு அறிவித்த பல்வேறு திட்டங்களை நிராகரித்தும், செயல்படுத்தாமலும் கிடப்பில் போட்டுள்ளது. இதனால், தமிழகம் வளர்ச்சி காணாமல் ஊழல் மலிந்து காணப்படுகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும்" என்று பட்டுக்கோட்டையில் பேசினார் அமித்ஷா.**

"இந்தியாவின் மிகவும் ஊழல் நிறைந்த ஜெயலலிதாவின் அரசாங்கத்தை மக்கள் மாற்றி, பா.ஜ.க.வுக்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும்" என்று, தான் போகும் இடமெல்லாம் பேசினார்.

ஜெயலலிதாவை மட்டுமல்ல, இன்றைக்கு இருக்கிறாரே பழனிசாமி, அவர் ஆண்ட போதும், 'நாட்டிலேயே ஊழல் மிகுந்த ஆட்சி, தமிழ்நாட்டில்தான் நடக்கிறது" என்று பேசியவர் அமித்ஷா. 09.07.2018 - அன்று திருச்சியில் பேட்டி அளிக்கும் போது இப்படிக் குறிப்பிட்டார்.

**"அ.தி.மு.க. தலைவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன. அவை அரசியல் வழக்குகள் அல்ல, ஊழல் வழக்குகள். இவர்கள் ஆட்சிக்கு வரும் போதெல்லாம் ஊழல் செய்துள்ளனர். சொத்துக் குவிப்பு வழக்கு இருக்கிறது. இந்த ஊழல் காரணமாக தமிழ்நாடு வளர்ச்சி அடையவில்லை. அ.தி.மு.க. அரசின் ஒத்துழைப்பு இல்லாததால் மத்திய அரசின் திட்டங்கள் தமிழக மக்களைச் சென்று சேரவில்லை. எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதில் கூட தமிழ்நாடு அரசு காலதாமதம் செய்கிறது" என்றெல்லாம் பேட்டி அளித்தவர்தான் இந்த அமித்ஷா. இப்போது ஜெயலலிதாவின் 'வாரிசாக' தன்னைக் காட்டிக் கொள்கிறார்.**

இன்றைக்கு யாருடைய பாத யாத்திரையைத் தொடங்கி வைக்க அமித்ஷா வந்திருக்கிறாரோ, அதே அண்ணாமலையிடம் கேட்டால் தெரியுமே ஜெயலலிதாவைப் பற்றி. "1991-96 ஆண்டுகளில் தமிழ்நாட்டை ஆட்சி செய்தவர் ஜெயலலிதா. அவரது ஆட்சிகாலம் ஊழலில் மிக மோசமான காலக்கட்டமாக இருந்ததா?" என்று ஒரு ஆங்கிலப் பத்திரிக்கை கேட்கிறது. அப்போது அண்ணாமலை, "தமிழகத்தில் பல நிர்வாகங்கள் ஊழல் மலிந்தன. முன்னாள் முதல்வர்கள் நீதிமன்றங்களில் தண்டனை பெற்றுள்ளனர். அதனால்தான் தமிழகம் ஊழல் மிகுந்த மாநிலமாக மாறியுள்ளது. ஊழலில் நம்பர் ஒன் என்று சொல்வேன்," என்றார்.

ஊழல் வழக்கில் தண்டனை பெற்று சிறைக்குப் போனவர் - பதவியை இழந்தவர் ஜெயலலிதா மட்டும்தான். அவரது பெயரைச் சொல்லாமல் சொல்லி இருந்தார் அண்ணாமலை. இந்தப் பேட்டிக்கு எதிராக அ.தி.மு.க. கொந்தளித்ததே. அ.தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் போடப்பட்டதே. இதுவாவது உள்துறை அமைச்சருக்குத் தெரியுமா?

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அளித்த பேட்டி மிக முக்கியமானது. "கர்நாடக மாநில பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளராக அண்ணாமலை சென்றார். அங்கு பா.ஜ.க. தோற்றது. இதுவரை எந்த அரசும் 40 சதவீத கமிஷன் வாங்கியதில்லை. ஆனால், கர்நாடக பா.ஜ.க. அரசு வாங்கியது. ஊழல் பற்றி பேசும் அண்ணாமலை, கர்நாடக பா.ஜ.க. அரசின் ஊழல் பற்றியும் பேச வேண்டியதுதானே? ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க. எம்.எல்.ஏ.-க்கள் சட்டப்பேரவைக்குச் செல்ல அ.தி.மு.க.தானே காரணம்? அதை அண்ணாமலை மறுப்பாரா?" என்று கேட்டார் ஜெயக்குமார்.

**பெங்களூரு நீதிமன்றத்தில் நான்காண்டு சிறைத்தண்டனையும் - 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்ட ஜெயலலிதாவின் புகழை பா.ஜ.க. பாடுவதும் - '40 சதவிகித கமிஷன் பா.ஜ.க. அரசு' என்று அ.தி.மு.க.வால் குற்றம் சாட்டப்பட்ட பா.ஜ.க.வை அ.தி.மு.க. ஆதரிப்பதும் - அவர்கள் இப்போது உருவாக்கி இருப்பது ஊழல் கூட்டணி என்பதையே காட்டுகிறது.**

## பி.எஸ்.எல்.வி. ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது!

ஸ்ரீஹரிகோட்டா, ஆக. 1 - சிங்கப்பூரின் வானிலை ஆய்வு செயற்கைக் கோள் உள்ளிட்ட 7 செயற்கை கோள்களுடன் பி.எஸ்.எல்.வி. சி56 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ, வணிக ஒப்பந்த அடிப்படையில் வெளிநாடுகளின் செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி வருகிறது.

இந்த வகையில், சிங்கப்பூரின் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும் ஒப்பந்தங்களை இஸ்ரோ மேற்கொண்டுள்ளது.

இதற்காக 44.4 மீட்டர் உயரம் கொண்ட பி.எஸ்.எல்.வி. சி56 ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து நேற்று முன்தினம் (30.7.2023) காலை 6.30 மணிக்கு 'பி.எஸ்.எல்.வி. சி56 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.7.2023) சென்னை, சர்.பிட்டி தியாகராயர் கலை மன்றத்தில் நடைபெற்ற பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு புத்தகங்களை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், திராவிடர் கழகப் பிரச்சார செயலர் வழக்குரைஞர் அருள்மொழி, பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் துணைவியார் பார்வதி அம்மையார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.7.2023) சென்னை, சர்.பிட்டி தியாகராயர் கலை மன்றத்தில் நடைபெற்ற பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு ஆசிரியர் மற்றும் மாணவ – மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், திராவிடர் கழகப் பிரச்சார செயலர் வழக்குரைஞர் அருள்மொழி, பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் துணைவியார் பார்வதி அம்மையார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நியமனம்!

## சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு வரவேற்பு!

### அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கம் அறிக்கை!

சென்னை, ஆக. 1 - அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் நியமனம் தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கங்காபூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு ஆகியோரின் இன்றைய தீர்ப்பினை அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் தமிழ்நாடு வரவேற்கிறது.

இதுகுறித்து அச்சங்க தலைவர் ரங்கநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆதிதிராவிடர் முதல் பிராமணர் வரையிலான அனைத்துச் சாதியினரும் முறையாகப் படித்து, தகுதிப்படுத்திக் கொண்டால் அர்ச்சகர் ஆகலாம் என்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷின் தீர்ப்பிற்கு தடை விதிக்க மறுத்துள்ளது.

அர்ச்சகர் வழக்கு தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை தரப்பில் வாதாடிய அரசு தலைமை வழக்கறிஞருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக அரசு, அர்ச்சகர் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்!

சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் அர்ச்சகர் நியமனத்திற்காக கடந்த 2018 ஆம் ஆண்டு விண்ணப்பங்களை வரவேற்று கோயில் நிர்வாக அதிகாரி உத்தரவினை பிறப்பித்திருந்தார். இந்த உத்தரவினை எதிர்த்து சுகவனேஸ்வரர் கோயிலில் அர்ச்சகராக இருக்கக்கூடிய சுப்பிரமணியம் குருக்கள் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். மேலும் தனது மனுவில் சுகவனேஸ்வரர் கோயில் ஆகமத்தின் அடிப்படையிலானது.

அர்ச்சகர் நியமனத்திற்காக இந்த அறிவிப்பில் கோரப்பட்ட விண்ணப்பம் ஆகமத்தின் அடிப்படையில் இல்லை என தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு, கடந்த 23 ஆம் தேதி நீதிபதி ஆனந்த் வெங்கடேசன் முன்பு விசாரணைக்கு வந்து தள்ளுபடியானது. இந்த தீர்ப்பை எதிர்த்து மனுதாரர் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு வழக்கு தலைமை நீதிபதி கங்காபூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், "ஆகம கோவில்களில் அர்ச்சகர்கள் பரம்பரையாகதான் நியமிக்க வேண்டும். தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும்" என வாதிடப்பட்டது. இதனைக் கேட்ட நீதிபதிகள் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க மறுப்பு தெரிவித்தனர். அர்ச்சகர் நியமனத்தில் சாதிக்கு எந்த பங்கும் இல்லை. யார் வேண்டு மானாலும் அர்ச்சகர் ஆகலாம். இந்த வழக்கில் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் விளக்கம் அளிக்க செப்டம்பர் 22 ஆம் தேதிக்கு வழக்கை ஒத்தி வைத்தனர்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த வெங்கடேஷின் தீர்ப்பு, அனைத்து இந்துக்களின் அர்ச்சகர் நியமனத்தில் முன்னேற்றத்தை காட்டும் தீர்ப்பாகும். முறையான அரசியல் சட்டக் கண்ணோட்டத் தோடு, உச்சநீதி மன்ற தீர்ப்புகளை சரியான கண்ணோட்டத்தில் தீர்ப்பு அணுகியுள்ளது. மிக நீண்ட காலமாக தெளிவாக்கப்படாத ஆகமத்தின் இரு கூறுகளை நீதிபதி தெளிவுபடுத்தி இருந்தார்.

குறிப்பாக, ஆகமத்தின் இரு பகுதிகளில் ஒன்றான பூஜை, சடங்குகள் தொடர்பான விசயங்களில் அரசு தலையிட முடியாதென்ற உச்சநீதிமன்ற தீர்ப்புகளை உறுதி செய்யும் நீதிபதி, ஆகமத்தின் மற்றொரு பகுதியென பிராமண அர்ச்சகர்கள் கூறும் அர்ச்சகர் நியமனம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார்.

அர்ச்சகர் நியமனம் என்பது மதச் சார்பற்ற நடவடிக்கை, அரசு , கோயில் நிர்வாகம், அறநிலையத்துறை ஆகியோர் சாதி வேறுபாடின்றி அர்ச்சகர் நியமனத்தை மேற்கொள்ளலாம். விண்ணப்பிக்கும் அர்ச்சகர்கள், சம்மந்தப்பட்ட கோயிலின் ஆகமத்தைப் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பது மட்டுமே தகுதி என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் சேசம்மாள், நாராயண தீட்சிதலு, ஆதித்யன், ஆதிசைவ சிவாச்சாரியார்கள் உள்ளிட்ட அனைத்து தீர்ப்புகளையும் முறையாக ஆராய்ந்து, சரியான பொருளில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகமத்தில் குறிப்பிட்ட சாதியினர் மட்டும்தான் கருவறையில் பூஜை செய்ய முடியும் என்று சொல்லியிருந்தாலும் அது செல்லாது என்ற தீர்ப்பின் விளக்கமே அர்ச்சகர் நியமனத்தில் முக்கியமானது.

பரம்பரை வழி அர்ச்சகர் என்ற கோரிக்கையை உச்சநீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் நிராகரித்த நீதிபதி, சாதியும் தகுதியல்ல என்பதைக் கூறுகிறார். எளிமையாகச் சொன்னால், ஆதிதிராவிடர், அருந்ததியர் முதல் பிராமணர் வரையிலான சாதியில் உள்ள எவரும் முறையாக ஆகமம் கற்றுத் தேர்ந்தால் அர்ச்சகராகலாம் என்பதே தீர்ப்பின் சாரம்.

எனினும் தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளாக கலைஞரால் சொல்லப்பட்ட, அனைத்து சாதி அர்ச்சகர் நியமனம் என்ற கருவறைத் தீண்டாமை பிரச்சினை இன்னும் நிரந்தரத் தீர்வை எட்டவில்லை. மிகக் குறிப்பாக, அதிக வருமானம் வரும் தமிழகத்தின் பெருங்கோயில்களை தங்கள் சொத்துக்களாகக் கருதும் பிராமண அர்ச்சகர்கள், உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட பரம்பரை வழி, சாதி வழி அர்ச்சகர் என வழக்குத் தொடுப்பதில்லை. மாறாக, தாங்கள் தனி மத உட்பிரிவினர் (Religious Denomination) என்றும், நான்கு ரிஷி வழிவந்தவர்கள் என்றும், தாங்கள் மட்டுமே கோயிலில் பூஜை செய்வதென்பது கோயிலின் பழக்கம், வழக்கம், மரபென்றும் சொல்கிறார்கள்.

சேலம் சுகனேசுவரர் கோயில் வழக்கில் தனி மத உட்பிரிவினர் என்ற கோரிக்கை எழாததால், இதற்கு தீர்வு காணப்படவில்லை. அர்ச்சகர் நியமனம் தொடர்பான அறநிலையத் துறை பணியாளர் விதிகள் 7 &9 செல்லாது என்ற சென்னை உயர்நீதிமன்ற அமர்வின் 2022ஆம் ஆண்டுத் தீர்ப்பிற்கு இன்றுவரை மேல்முறையீடோ, மறு ஆய்வு மனுவோ, இந்து சமய அறநிலையத்துறை தாக்கல் செய்யாததையும் தீர்ப்பு சுட்டிக் காட்டுகிறது. எனினும் இன்று வழங்கப்பட்ட தீர்ப்பை அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கம் - தமிழ்நாடு வரவேற்கிறது. அர்ச்சகர் நியமனத்திற்கான தடைகள் நீங்கியுள்ளது.

எனவே, தமிழக அரசு அர்ச்சகர் பணி நியமனங்களை, வழக்கு உச்சநீதிமன்றம் செல்லும்முன் உடனடியாக நியமிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### 107 வயது நிறைவடைந்த

## ஓய்வூதியர் கு.கோபாலகிருஷ்ணனுக்கு பாராட்டு!

### அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சந்தித்து வாழ்த்து!

சென்னை, ஆக. 1 - 107 வயது நிறைவடைந்த கு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டக் கருவூலம் மூலமாக 01.05.1972 முதல் குடிமை ஓய்வூதியம் பெற்று வருகிறார். அவரது ஓய்வூதிய கொடுவை ஆணை எண்.A69690. ஓய்வூதியர் பிறந்த தேதி 26.10.1916. தனியர் தற்போது 107 வயதை நிறைவு செய்துள்ளார். தமிழ்நாட்டில் ஓய்வூதியம் பெறுபவர்களில் கு.கோபாலகிருஷ்ணன் அவர்களே வயதில் மூத்தவர் ஆவார். இவருக்கு ஒரு மகன் மற்றும் மகள் என இரு வாரிசுகள் உள்ளனர்.

இவர் இரண்டாம் உலகப்போர் (1939 - 1945) நடைபெற்ற காலத்தில் இராணுவத்தில் I.E.M.E படை பிரிவில் சேர்ந்து மோட்டார் மெக்கானிக் மற்றும் கனரக வாகன ஓட்டுநராக LansNayak பதவி நிலையில் ஐந்து வருடங்கள் பணிப்புரிந்துள்ளார். அப்போது பர்மா, மணிப்பூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போரில் பங்கெடுத்துள்ளார். அன்றைய காலக்கட்டத்தில் ஐந்து பதக்கங்களையும் பெற்றுள்ளார். அதன்பிறகு ஒன்றிய அரசுப் பணியில் சில காலம் சுங்கத் துறையில் பணியாற்றி உள்ளார். அதன்பிறகு தமிழ்நாடு காவல் துறையில் பணியில் சேர்ந்து நாகப்பட்டினம், காவல் நிலையம்- திட்டச்சேரியில் காவலராக (Police Constable) பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

அவர்களை கௌரவிக்கும் விதமாக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கருவூல கணக்குத்துறை ஆணையர் க.விஜயேந்திரபாண்டியன், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) ரஞ்சித்சிங் ஆகியோர் ஓய்வூதியர் வசித்துவரும் இல்லத்திற்கு நேரில் வருகை தந்து ஓய்வூதியர்களுக்கான ஆண்டு நேர்காணலை மேற்கொண்டதுடன் நேர்காணல் சான்றிதழை அளித்து கௌரவித்தார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் 100 வயது நிறைவு செய்துள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்களை கௌரவிக்கும் விதமாக அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்களும் ஓய்வூதியர்களின் இருப்பிடத்திற்கு சென்று ஆண்டு நேர்காணல் செய்து கௌரவிக்க கருவூல கணக்குத்துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழக தலைவர் உ.மதிவாணன், நகரமன்ற துணைத் தலைவர் செந்தில்குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.உமாமகேஸ்வரி, சார் ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், கருவூல கணக்குத்துறையின் திருச்சி மண்டல இணை இயக்குநர், கருவூல கணக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் (கருவூலக் கட்டுப்பாடு), மாவட்ட கருவூல அலுவலர் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.